**Case No. DVC. No.02/2024, Dated: 11.03.2026**

**PW–1–வாசுகி, க/பெ. கோபால்**

**(சத்தியபிரமாணம் திரு. E. கோவிந்தராஜ், Grade III Bench Clerk of this court அவர்களால் செய்யப்பட்டது).**

**(விசாரணை தொடங்கப்பட்ட நேரம் 12.12.P.M):–**

**எதிர்மனுதாரர் ஆஜர். எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

1. இந்த வழக்கில் யார் யார் எதிர்மனுதாரர்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும் எனது கணவர் மற்றும் எனது மாமனார் மற்றும் மாமியார் உள்ளனர். 2 மற்றும் 3–ம் எதிர்மனுதாரரை மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றமானது இவ்வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டது குறித்து தெரியுமா என்றால் தெரியாது. 3–ம் எதிர்மனுதாரர் தற்போது உயிருடன் இருக்கிறாரா என்றால் இல்லை. 3–ம் எதிர்மனுதாரர் உயிருடன் இல்லை என்ற செய்தி தெரிந்தும் அவரை அவமானப்படுத்தும் நோக்கம் கொண்டு 2 மற்றும் 3 எதிர்மனுதாரரையும் பிரமாண பத்திரத்தில் தரப்பினராக சேர்த்து தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. 3–ம் எதிர்மனுதாரர் இறப்பிற்கு சென்று வந்தேன் என்றால் சரிதான்.

2. எனது வழக்கப்படி திருமணச் செலவு கணவர் வீட்டில் செய்வார்கள் என்றால் இருதரப்பினர்களும் செய்வார்கள். எனது தாயார் திருமணத்திற்கு எனக்கு செய்த நகை மற்றும் சீர்வரிசைகள் என்னிடம் உள்ளதா என்றால் அனைத்து நகைகளும் என்னிடம் உள்ளது சீர்வரிசை இல்லை. சீர்வரிசையின் விவரம் குறித்து பிரமாண பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை, சீர்வரிசை என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. எனது குடும்பத்தார் எதிர்மனுதாரருக்கு எத்தனை பவுண் நகை சீர்வரிசையாக அளிக்கப்பட்டது

என்றால் 1 1/2 பவுன் நகை அளிக்கப்பட்டது. பிரமாண பத்திரத்தில் எதிர்மனுதாரருக்கு 11 1/2 பவுன் நகை சீர்வரிசையாக போடப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தட்டச்சு பிழையாக குறிப்பிடப்பட்டுள்ளது. பிரமாண பத்திரத்தின் பொய்யான சங்கதிகள் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

3. எதிர்மனுதாரருக்கு எனது குடும்பத்தார் செய்த 1 1/2 பவுன் நகை குறித்து ரசீது தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. திருமணத்திற்கு 3 மாதத்திற்கு முன்னரே பெண் பார்த்து சென்றுவிட்டனர் என்றால் சரிதான். அதன்பின்னர் நானும் எனது கணவரும் நல்லமுறையில் பேசி வந்தோம் என்றால் சரிதான். எதிர்மனுதாரரை பற்றி எனது உறவினர் நன்முறையில் சொன்னதன் அடிப்படையில் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். எனது உறவினர்களும் எதிர்மனுதாரரின் ஊரில் வாழ்ந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 1–ம் எதிர்மனுதாரர் அரசு போக்குவரத்து துறையில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகின்றார் என்றால் சரிதான். அவரது வேலை சுழற்சி முறையில் உள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

4. அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநர் பணியினை தொடங்கும் முன்னர் ஒவ்வொரு முறையும் மது அருந்தியது குறித்து சோதனை செய்த பின்னரே பணிக்கு அனுமதிப்பார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எதிர்மனுதாரர் என்னை குடித்துவிட்டு வந்து தகாத வார்த்தைகளால் பேசுவார் என குறிப்பிடப்பட்டுள்ளதில் என்ன தகாத வார்த்தைகளால் பேசினார் என்று

குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 1-ம் எதிர்மனுதாரரின் அப்பா மற்றும் அம்மா நல்ல குடும்பத்தினை சேர்ந்தவர்கள் என்றால் முதலில் நல்ல விதமாகவே நடந்துகொண்டனர் பின்னர் அவ்வாறு நடந்துக்கொள்ளவில்லை. 1-ம் எதிர்மனுதாரர் குடித்துவிட்டு வந்தால் 2-3 எதிர்மனுதாரர்கள் என்ன விதமாக ஆதரித்து பேசுவார்கள் என குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

5. திருமணத்திற்கு பிறகு நானும் எதிர்மனுதாரரும் 1-ம் எதிர்மனுதாரரின் வீட்டில் தான் குடியிருந்து வந்தோம் என்றால் சரிதான். எத்தனை வருடமாக நானும் எதிர்மனுதாரரும் அங்கு குடியிருந்தோம் என்றால் 4 வருடங்கள். திருமணத்திற்கு முன்னே எதிர்மனுதாரர் அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக பணிபுரிந்தார் என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்னிட்டு எதிர்மனுதாரருடன் எதிர்மனுதாரர் நல்ல முறையில் வாழ்ந்து வந்தேன் என்றால் சரிதான், சிறு சிறு பிரச்சனைகள் வரும். எனது திருமணத்திற்கு பின்னர் தான் எனக்கு மின்சார வாரியத்தில் வேலை கிடைத்தது என்றால் சரிதான். எனக்கு வேலை கிடைப்பதற்கு அனைத்து முயற்சிகளும் எதிர்மனுதாரரே முன்னிற்று செய்தார் என்றால் சரியல்ல.

6. இந்த வேலையானது எனக்கு எழுத்து தேர்வின் மூலம் கிடைக்கவில்லை என்றால் சரியல்ல. வேலை கிடைத்த பின்பு நானும் எதிர்மனுதாரரும் தர்மபுரியில் வீடு எடுத்து நல்ல முறையில் வசித்து வந்தோம் என்றால் சரிதான், 1 வருடம் அங்கிருந்தோம். வேலை கிடைத்த பின்பு தான் கருத்து வேறுபாடு காரணமாக எதிர்மனுதாரருடன் சிறு சிறு பிரச்சனை ஏற்பட்டது

என்றால் சரியல்ல, அதற்கு முன்பு இருந்து பிரச்சனை உள்ளது. எதிர்மனுதாரர் மற்றும் அவரது பெற்றோர்கள் மகப்பேறு பாக்கியம் இல்லை என கூறி என்ன விதமாக தரம் தாழ்த்தி பேசினார் என பிரமாண பத்திரத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் ஒருவருடன் அழைபேசியில் பேசுவதை கொண்டு என்மீது சந்தேகப்பட்டு குத்துவிளக்கை எடுத்து குத்த வந்ததுடன் என்னை கொடுமையாக தாக்கினார் என்று எனது பெற்றோரிடம் கூறியபோது சமாதானம் படித்தினர் என பிரமாண பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது தவறு என்றும், அவ்வாறு சம்பவம் நடத்திருந்தால் எதிர்மனுதாரர் மீது எனது பெற்றோர் புகார் அளித்திருப்பார்கள் என்றும், அவ்வாறு சமாதான படுத்தியிருக்கமாட்டார்கள் என்றால் சரியல்ல.

7. நான் 5 மாதம் கர்பமாக இருந்தபோது எதிர்மனுதாரர் அடித்து தாக்கியதாக பொய்யாக பிரமாண பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. 5 மாத கர்பமாக நான் இருந்தபோது எதிர்மனுதாரர் தாக்கினார் என்றும், அதனால் நான் எனது தாயார் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றும், அங்கிருந்து சிகிச்சை பார்த்தேன் என்றும், பிரமாண பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், அவ்வாறு மருத்துவம் பார்த்தற்கான ரசீது தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. சிகிச்சை முடிந்த பின்னர் மீண்டும் எப்போது எதிர்மனுதாரர் வீட்டிற்கு வந்ததாக தேதி குறிப்பிட்டு பிரமாண பத்திரத்தில் சொல்லியுள்ளீர்களா என்றால் இல்லை, ஆனால் 5 மாத கர்பமாக இருந்தபோதே மீண்டும் எதிர்மனுதாரர் வீட்டிற்கு வந்ததாக குறிப்பிட்டுள்ளேன்.

8. எதிர்மனுதாரர் வீட்டிற்கு வந்த பிறகு 5 நாட்கள் கழித்து சேலம் அரசு மருத்துவமனையில் சேர்ந்தது குறித்து அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது மாமியார் என்ன கொடுமைபடுத்தினார் என்று பிரமாண பத்திரத்தில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எனக்கு எந்த மாதம், என்ன ஊரில் வளைகாப்பு நடந்தது என்றால் பிளியூரில் 2018–ம் வருடம் நடைபெற்றது. வளைகாப்பு நடந்தபோது எதிர்மனுதாரர் குடித்துவிட்டு என்ன தகராறு செய்தார் என பிரமாண பத்திரத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

**(எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுகிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**

**<u>(விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 12.42.P.M):–</u>**

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

R ELANCHEZHIAN

Digitally signed by R ELANCHEZHIAN
Date: 2026.03.11 12:45:01 +0530

District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.